## 8. தலைப்பு 6 – அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

---

### 8.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

---

ஆணைக்குழுவினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனி, கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

### 8.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

பற்றுச்சீட்டுக்கள் போன்ற தேவையான சான்றுகள் ஆணைக்குழு அலுவலகத்தில் காணப்படாமையினால் ரூபா 768,811 கூட்டுத் தொகைக்குரிய 11 கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வின்போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 8.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

**பாதீட்டு முரண்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதினொரு செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 8.26 சதவீதம் முதல் 60.44 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை விஞ்சி பொறுப்புகள் ஏற்படுத்தப்பட முடியாதெனினும், ஆணைக்குழுவின் அலுவலகத்தினால் இரண்டு செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி

ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 89,743 ஆகியபோதும், அது ரூபா 188,211 இனால் அதிகரித்து ரூபா 277,954 தொகையான பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**8.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

---

00601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் மீதான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவரது கடன் மீதி ரூபா 32,000 ஆகும். அந்த நிலுவைக் கடன் மீதி 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அந்த மீதியைத் தீர்த்து வைப்பதற்கு அலுவலகம் தவறியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது 54 பேர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 5,164,103 கூட்டுத் தொகையான இடர் கடனுக்கான முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளக் கடன் முற்பணத்திற்கான பிணை தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**8.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---

**8.5.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

---

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆணைக்குழுவினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

### 8.5.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 8.5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 யூன் 06 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஆண்டொன்றிற்கு நான்கு தடவைகள் கூட்டப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது குழுவின் கூட்ட அமர்வுகள் இரு தடவைகள் மாத்திரம் நடைபெற்றிருந்தன.

### 8.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

அலுவலகத்தின் வாகனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிப் பிரமாணம் 802(8) இன் பிரகாரம் ஆணைக்குழு அலுவலகத்திற்குச் சொந்தமான வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி, பெறுமதி, பழுதுபார்த்தல், விளைவற்றுக் காணப்பட்ட காலம் போன்ற தகவல்களை உள்ளடக்கிய பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆணைக்குழுவிற்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பான வாகன சம்பவத்திரட்டுப் புத்தகம் நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆணைக்குழுவிற்குச் சொந்தமான குழாம் வாகனங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 1646(1) இன் பிரகாரம் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த சம்பவ அறிக்கைகள் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிப்பிரமாணம் 1647(ஆ) இன் பிரகாரம் வாகனங்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல வாகனங்கள் தொடர்பாகவும் 06 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

## 8.7 முகாமைத்துவ நலிவுகள்

ஆணைக்குழுவின் 2014 பெப்ரவரி மாதத்திய மின்சாரப் பட்டியல்கள் தாமதமாகச் செலுத்தப்பட்டமையினால் வட்டியாக ரூபா 9,419 செலுத்தப்பட்டிருந்தது.

## 8.8 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 43 | 32 | 11 |
| (ii) | மூன்றாம் நிலை | 08 | 06 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 96 | 78 | 18 |
| (iv) | ஆரம்ப நிலை | 48 | 37 | 11 |
| (v) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 01 | (01) |
| | மொத்தம் | 195 | 154 | 41 |